**ஐக்கியநாடுகளிற்கான அமெரிக்காவின் நிரந்தரவதிவிடப் பிரதிநிதி சமந்தா பவர் இளைஞர்களுக்கு ஆற்றிய உரை-நவம்பர் 23 2015**

**தூதுவர் சமந்தாபவர்:** இங்கு பிரசன்னமாகியிருப்பதற்காக உங்கள் அனைவருக்கும் நன்றி! நன்றி தரிசா, என்னால் உங்களிற்கு ஓன்றை தெரிவிக்க முடியும் எங்களால் பரஸ்பரம் பாராட்டுகளை தெரிவிக்கும் சமூகமொன்றை உருவாக்க முடியும், ஏனெனில் உங்கள் அனைவருக்கும் தெரிந்திருக்கும், தரிசா ஒரு சிறந்த பத்திரிகையாளர். அவரது பணி குறித்த மிகவும் சிறப்பான அம்சம் என்னவென்றால் அவர் ஏனைய பலர் தவிர்க்கும் செய்திகளை தெரிவிப்பதற்காக எதிர்கொள்ளும் ஆபத்துக்களே.- உதாரணமாக ஊழல்கள் போன்றவை, நீதித்துறையின் சுதந்திரம் பறிபோகின்றமை மற்றும் கடந்தவருடம் அளுத்கமவில் இடம்பெற்ற மத வன்முறைகள் போன்ற செய்திகள். ஆகவே நன்றி தரிசா! இன்றைய நிகழ்வை நெறிப்படுத்துபவதற்காக, அதனை விட முக்கியமாக உங்கள் சகஇலங்கையர்களிற்கு நீங்கள் ஆற்றுகின்ற பணிக்காகவும்( கைதட்டல்கள்)

இலங்கைக்கு மீண்டும் வருகை தருவது எவ்வளவு மகிழ்ச்சிகரமானதாக விளங்குகின்றது என்பதை எண்ணால் வார்த்தைகளில் உங்களிற்கு வர்ணிக்க முடியாது, உங்கள் அற்புதமான தேசத்தில் செலவிடும் இந்த மூன்று நாட்களில் என்னால் முடிந்தளவிற்கு பல பணிகளை மேற்கொள்ள முயன்றுள்ளேன், அரசியல் தலைவர்கள், இராணுவ அதிகாரிகளை சந்தித்தல், சிவில் சமூக அமைப்புகள், மனித உரிமை அமைப்புகள் போன்றவற்றை சந்தித்தல், தரிசா போன்ற துணிச்சலான ஊடகவியலாளர்களை சந்தித்தல், நான் யாழ்ப்பாணத்தில் ஓஸ்மானியா கல்லூரியில் சில பாடசாலை மாணவிகளுடன் முதற்தடவையாக எல்லே விளையாடியதை உங்களில் சிலர் பார்த்திருப்பீர்கள். உங்களில் பலருக்கு தெரிந்திராத அல்லது எனது மிகப்பெரிய சுயகுறிப்பில் தவறவிடப்பட்ட விடயம் ஓன்றுள்ளது, நான் பத்திரிகையாளராக, இராஜதந்திரியாக வரவிரும்பியதற்கு முன்னர் பேஸ்போல் வீராங்கனையாக வரவேண்டும் என கனவுகண்டேன். (சிரிப்பு) நேற்று முதற்தடவையாக எல்லே விளையாடிய பின்னர் நான் பேஸ்போல் விளையாட்டை தெரிவுசெய்திருந்தால் என் தலைவிதி வேறு மாதிரியானதாக மாறியிருக்கும் என நான் நினைத்தேன் (சிரிப்பு). அந்த மாணவிகளுடன் இருந்தது அற்புதமான விடயமாக காணப்பட்டது, இலங்கையின் ஊடகங்களிற்கு எப்படியோ போய்சேர்ந்த புகைப்படங்களின் சிறப்பு அம்சம் என்னவென்றால் எனக்கு பந்தை எறியும்போது அந்த மாணவிகளின் முகத்தில் தெரியும் உணர்வே.

2010இல் நான் முதற்தடவையாக இலங்கைக்கு வந்தபோது காணப்பட்ட நிலையில் தற்போது பாரிய மாற்றம் ஏற்பட்டுள்ளது. இந்த வருடத்தின் இரு தடவைகள் இலங்கையின் அதிகளவான மக்கள் ஜனநாயக, அனைவரையும் உள்வாங்கிய, பொறுப்புக்கூறும் அரசாங்கத்தை கொண்டிருப்பதற்கான தங்கள் விருப்பத்தை வெளிப்படுத்தியுள்ளனர். இரு தடவைகள் நீங்கள் அனைவரும் பிரிவினைக்கு பதில் நல்லிணக்கத்திற்கான பாதையை தெரிவுசெய்துள்ளீர்கள். அந்த நல்லிணக்க செயற்பாடுகள் இன்னமும் முழுமை பெறவில்லை- தொடர்ந்து முன்னெடுக்கப்படுகின்றது. இன்று நான் உங்கள் மத்தியில் நீங்கள் இந்த நல்லிணக்க நடைமுறையை பலப்படுத்துவதற்கு மேற்கொள்ளகூடிய மூன்று விடயங்கள் குறித்து சுட்டிக்காட்ட விரும்புகின்றேன், கடந்த காலத்தின் காயங்களை ஆற்றுவதற்கும், நாட்டின் எதிர்காலத்திற்கு அவசியமாகவுள்ள அடிப்படை சுதந்திரங்களை, கட்டியெழுப்புவதற்கும் உள்ளடக்கல் தன்மையை கொண்டிருப்பதற்கும் இவை உங்கள் நாட்டிற்கும் அனைத்தும் நாடுகளிற்கும் அவசியமானவை.

முதலாவது உங்கள் நாட்டின் தலைவிதியை தீர்மானிப்பதற்கு உங்களுக்குள்ள உரிமையை தொடர்ந்தும் பயன்படுத்துமாறு நான் ஊக்குவிக்கின்றேன். உங்களை போன்ற இளந்தலைமுறையினரை உள்ளடக்கிய இலங்கை மக்களே வலுவான பெருமளவு ஜனநாயகம், அனைவரையும் உள்வாங்குதல்,மனித உரிமைகளிற்கு மதிப்பளித்தல் ஆகிய கொள்கைகளை முன்வைத்த அரசாங்கத்தை தெரிவுசெய்தனர். நீங்கள் கூட்டாக பிரிவினைக்கு பதில் நல்லிணக்க

பாதையை தெரிவுசெய்தீர்கள் அச்சத்திற்கு பதில் நம்பிக்கையை தெரிவுசெய்தீர்கள். எனினும் இலங்கையர்களின் இந்த ஈடுபாடுகள், செயற்பாடுகள் வெறுமனே வாக்குபெட்டியுடன் முடிவடைந்துவிடக்கூடாது. நீங்கள் உங்கள் குரல்களை ஒலிக்கவேண்டும், அவை செவிமடுக்கப்படுவதை உறுதி செய்ய வேண்டும், உங்கள் அரசாங்கம் உங்களிற்கு அளித்த வாக்குறுதிகளிற்கு பொறுப்புக்கூறச்செய்ய வேண்டும், ஏனெனில் இலங்கையின் எதிர்காலத்துடன் அதிகளவு தொடர்புபட்டவர்கள் நீங்களே.

இங்கு நான் எங்கள் அற்புதமான, மிகப்பெரும் ஜனாதிபதி பராக் ஒபாமா பயன்படுத்திய மேற்கோளை உங்கள் முன் முன்வைக்க விரும்புகின்றேன், பராக் ஒபாமா அமெரிக்காவின் மிகப்பிரபலமான உச்சநீதிமன்ற நீதிபதி லூயிஸ்பிரான்டிஸ் தெரிவித்ததை மேற்கோள் காட்டியிருந்தார், அவர் இவ்வாறு குறிப்பிட்டிருந்தார்-'எந்த ஜனநாயகத்திலும் மிகவும் முக்கியமான அலுவலகம் என்பது பிரஜைகளின் அலுவலகமே'', இதனையே இலங்கையில் நீங்கள் காணப்பபோகின்றீர்கள் என நான் கருதுகின்றேன், அனேகமானவர்கள் இதனை கண்டுள்ளனர்.

இதன் ஒரு பகுதியாக பெண்களும் பங்குபெறுவதை கருதுங்கள், இன்று உங்களில் அரைவாசிப்பேர் பெண்கள் என நான் நினைக்கிறேன், பார்வையாளர்கள் வரிசையில் பலரை காண்பது புத்துணர்வையளிக்கின்றது. உலகின் பல பகுதிகளில் கல்வியில் பெண்கள் ஆண்களைவிடவும் பின்தங்கியுள்ள அதேவேளை இலங்கையில் பெண்களின் எண்ணிக்கை ஆண்களைவ விட அதிகமாக காணப்படுகின்றது. பல்கலைக்கழகங்களில் கல்வி பயில்பவர்களில் 60 வீதமானவர்கள் பெண்களாக காணப்படுகின்றனர். எனினும் இலங்கை பாராளுமன்றத்தில் பெண்களின் விகிதாச்சாரம் எவ்வளவு என உங்களால் ஊகிக்க முடியுமா அல்லது தெரிவிக்க முடியுமா? யாராவது ?

ஆம் அந்த நபரிற்கு தெரிந்திருக்கின்றது, முன்வரிசையில் உள்ள அந்த நபரிற்கு தெரிந்திருக்கின்றது, அது ஐந்து வீதம். 1947 இல் இலங்கையின் முதல் பாராளுமன்றம் தெரிவுசெய்யப்பட்ட வேளை பெண்களின் பிரதிநிதித்துவம் 3 வீதமாக காணப்பட்டது. அது 1947 ல் இன்று 2015 இல் பெண்களின் பாராளுமன்ற பிரதிநிதித்துவம் 5வீதமாக காணப்படுகின்றது. இது மூன்று வீதத்திலிருந்து 5 வீதமாக அதிகரித்துள்ளது, இது சொல்லக்கூடிய முன்னேற்றமல்ல.

உண்மையை சொல்வதானால் உலகின் பல பகுதிகள் இந்த விடயத்தில் அவை இருக்கவேண்டிய இடத்தில் இல்லை. அமெரிக்காவை உதாரணத்திற்கு எடுத்துக்கொண்டால் அமெரிக்க காங்கிரஸில் 20 வீதமானவர்களே பெண்கள். நான் அமெரிக்காவின் நிரந்தர வதிவிடப்பிரதிநிதியாக பணியாற்றும் ஐக்கியநாடுகளில் அங்கம் வகிக்கும் 193 நாடுகளில் 37 நாடுகள் மாத்திரமே பெண்பிரதிநிதிகளை கொண்டுள்ளன, இது அமெரிக்க காங்கிரஸில் பெண்களின் விகிதாச்சாரத்திற்கு ஒப்பானது- அதாவது 20 வீதம்,

உங்கள் நாட்டைபொறுத்தவரை பெண்களின் தலைமைத்துவம் குறித்த பெருமைக்குரிய வரலாறு காணப்பட்டாலும் இதனை பெண்களின் பிரதிநிதித்துவமாக மாற்றவேண்டிய தேவையுள்ளது. 1960இல் நாட்டின் தலைவராக பெண்ணொருவரை தெரிவுசெய்த உலகின் முதலாவது தேசம் உங்களுடையது, உங்களிற்கு இது நன்கு தெரிந்த விடயம். அமெரிக்கா கூட இதுவரை செய்திராத விடயம் இதுவென்பதை நான் கருத்திலெடுத்துள்ளேன். ஆசியாவில் பெண்களுக்கு வாக்குரிமையை அளித்த முதல்நாடு இலங்கை. 1928 இல் இலங்கையில் பெண்களிற்கான வாக்குரிமையை கோரும்போரட்டம் தீவிரமாக இடம்பெற்றுக்கொண்டிருந்த வேளை, அதற்கு தலைமை தாங்கிய தலைவர்களில் ஒருவரான அக்னஸ் டி சில்வா என்ற பெண்ணிடம் உத்தியோகபூர்வ விசாரணையின்போது பெண்களிற்கு வாக்களிப்பதற்கான உரிமையை வழங்கினால் தமிழ்பெண் தோட்டத்தொழிலாளர்களிற்கும் வாக்குரிமை வழங்கப்படவேண்டுமா என கேள்வி எழுப்பட்டது, இந்த கேள்விக்கு அவர் அளித்த விடை குறித்து பின்னர் அவர் எழுதியிருந்தார், அந்த விடை மிகச்சரியானது--''நான் இவ்வாறு பதிலளித்தேன் பெண்

தோட்டத்தொழிலாளர்களும் பெண்களே,நாங்கள் அனைத்து பெண்களிற்கும் வாக்குரிமை வழங்கப்படுவதை விரும்புகின்றோம்''.

தலைமைத்துவ நிலைகளில் பெண்கள் காணப்படுவது உள்ளாந்த ரீதியில் மாத்திரம் முக்கியமான விடயம் அல்ல, அது உங்கள் நாட்டின் எதிர்காலத்திற்கும் அவசியமானது, முக்கியமான விடயம், பெண்கள் அதிகளவிற்கு கல்வியறிவை பெற்றுள்ள, சிறந்த தேக ஆரோக்கியத்துடன் உள்ள, சமூகத்தில் முழுமையாக பங்களிப்பை வழங்ககூடிய நாடுகள் அதிகளவிற்கு ஸ்திரதன்மையுடன், சமாதானமாக, வளத்துடன், காணப்படுகின்றன என்பதை பல ஆய்வுகள் வெளிப்படுத்தியுள்ளன. இதனை அறிந்திருந்தும், இந்த அறையில் உள்ள அனைத்து பெண்களையும் பார்க்கும்போதும் ஆகஸ்டில் இடம்பெற்ற பொதுத்தேர்தலில் 5600 ஆண்களுடன் ஒப்பிடும்போது 500பெண்கள் மாத்திரமே போட்டியிட்டார்கள் என்ற விடயம் ஆச்சரியமளிக்கின்றது. ஒவ்வொரு பெண்ணையும் விட பத்துவீதம் அதிகமான ஆண்வேட்பாளர்கள்.

ஆகவே இந்த அறையில் உள்ள பெண்களிற்கு நான் தெரிவிக்கவிரும்புவது இதுதான், பொது அலுவலகங்களில் அதிகளவிற்கு நீங்கள் காணப்பட்டால் நாட்டிற்கு அதிகளவிற்கு சேவையாற்ற முடியும், ஆகவே குறிப்பிடத்தக்க அளவானவர்களாவது மிகவிரைவில் ஒரு நாள் தேர்தலில் போட்டியிடுவது குறித்து சிந்திப்பீர்கள் என கருதுகிறேன்,

நிச்சயமாக இளம் பெண்களிற்கும் ஆண்களிற்கும் உங்கள் சமூகத்தை சிறந்த முறையில் உருவாக்குவதற்கு உதவுவதற்கு பல வழிகள் உள்ளன. நான் என்னுடைய பயணத்தின்போது இதனை கற்றுக்கொண்டேன், தரிசா தெரிவித்தது போல ஊடகவியலாளராக ஆரம்பித்து பின்னர் கல்விமானாக மாறி, பின்னர் சற்று சுலபமாக அரசியலிற்குள் நுழைந்து பின்னர் இறுதியாக எனது கனவான அமெரிக்காவை பிரதிநிதித்துவம் செய்யும் இராஜதந்திர பணியில், நிச்சயமாக எனது வாழ்க்கையில் இன்னொரு கட்டம் உள்ளது. என்னால் தொழில்சார் ரீதியிலான எல்லே விளையாட்டு வீராங்கனையாக இன்னமும் வரமுடியும் என நான் கருதுகிறேன்,(சிரிப்பு)

நேற்று யாழ்ப்பாணத்தில் நான் நினைத்து பார்த்தாலே மனதிற்கு மிகவும் வேதனையை அளிக்ககூடிய நிலையில் உள்ள பெண்களை காணும் அரியவாய்ப்பு கிடைத்தது, இந்த பெண்கள் சகலவிதமான சவால்கள் மற்றும் நெருக்கடிகள் மத்தியிலும் தங்கள் குடும்பத்திற்கும் சமூகத்திற்கும் தலைமை தாங்குகின்றனர்: கணவன்மார்கள் அல்லது பிள்ளைகள் காணமற்போன அல்லது கொல்லப்பட்ட பெண்கள். ஆனால் அவர்களை கண்டுபிடிப்பதற்கான முயற்சிகளை நிறுத்தாத பெண்கள்: தங்கள் குடும்பங்கள் இடம்பெயர்ந்த பெண்கள் ஆனால் தங்கள் நிலங்களை மீளப்பெறுவதற்கான போராட்டத்தை தொடரும் பெண்கள். அதேவேளை குழந்தைகளை பராமரிக்கும் பெண்கள்: பாலியல் வன்முறைக்குள்ளான பெண்கள். குற்றவாளிகளினால் அச்சுறுத்தப்படுகின்ற போதிலும், சமூகத்தினால் களங்கம் சுமத்தப்படுகின்ற போதிலும் தங்களிற்கு நியாயம் கோருவதற்கு துணிச்சல் உள்ள பெண்கள்.

வடபகுதியில் மாத்திரம் இவ்வாறான பெண்கள் தலைமை தாங்கும் 60000 குடும்பங்கள் உள்ளன. மேலும் நாட்டின் ஏனைய பல பகுதிகளில் கடினமான சூழ்நிலைகளை எதிர்கொள்ளும் பெண்கள் உள்ளனர். தொடர்ந்தும் பாரியசுமையை சுமக்கும்- அனேகமாக தன்னந்தனியாக- இந்த பெண்களை ஒரு முழு தலைமுறையே உள்ளது. அவர்களிற்கு மேலும் ஆதரவு அவசியம். அச்சம் உங்கள் செயற்பாடுகளை பாதிக்க அனுமதிக்க கூடாது என்ற எனது இரண்டாவது பரிந்துரைக்கு இந்தப் பெண்களே சிறந்த உதாரணம்.

ஐக்கிய நாடுகளின் மிகதலைசிறந்த இராஜதந்திரிகளில் ஒருவரும், மிகமோசமான உள்நாட்டு யுத்தத்திலிருந்து மீளும் சமூகங்களிற்காக தனது வாழ்க்கையை அர்ப்பணித்தவரும், 2003 இல் ஈராக்கில் இடம்பெற்ற தற்கொலை குண்டுதாக்குதலில் உயிர்பறிக்கப்பட்டவருமான சேர்கியோ

வியாரா டிமெல்லோ-இந்த எண்ணம் குறித்து அடிக்கடி குறிப்பிடுவார், -அச்சமே மோசமான ஆலோசகர், அச்சமே மோசமான ஆலோசகர்.

உங்கள் அனைவருக்கும் நன்கு தெரியும், உங்கள் நாட்டிற்கும் உங்கள் தலைமுறைக்கும் குறிப்பாக இந்த அறையில் பெரும்பான்மையாக உள்ள இளம் தலைமுறையினருக்கும் நம்பமுடியாத நம்பிக்கைக்குரிய காலமிது. உங்கள் வாழ்க்கையின் பெருமளவான காலம் முழுவதும் உங்கள் நாடு யுத்தத்தில் ஈடுபட்டிருந்தது. ஆனால் நீங்கள் சந்தித்த சமீப வருடங்களில்- பல சந்தர்ப்பங்களில் யுத்தத்தில் ஈடுபட்டிருந்த நாட்டை சமதானத்திற்கு மாற்றும் செயன்முறையாக காணப்பட்டுள்ளது. குறிப்பாக ஜனவரி தேர்தலிற்கு பின்னர் இந்த செயற்பாடுகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன.

நிறைவேற்று அதிகாரத்தை கைவிடுவது தொடர்பாக கடந்தவாரம் முன்வைக்கபட்டுள்ள சீர்திருத்தங்கள் முதல், முன்னர் கட்டுப்படுத்தப்பட்டிருந்த அடிப்படை சுதந்திரங்களை மீள ஏற்படுத்துதல் வரை, கையகப்படுத்தப்பட்ட நிலங்களை மீளவழங்குவது, மாற்றங்கள் நிச்சயமாக இடம்பெறுகின்றன. எனினும் என்னை விட அதிகமாக உங்களிற்கு தெரிந்திருக்கும் சில குரல்கள் உங்கள் அச்சத்தை தூண்டுபவனவாக காணப்படுகின்றன. சில வேளைகளில் குரல்கள் உங்கள் தலையில் கூட காணப்படலாம். கடந்த காலத்தில் நீங்கள் ஆழமாக சென்றால் சிறந்த எதிர்காலத்தை நீங்கள் பெறமுடியாத அச்சங்கள். சில சுதந்திரங்களை மீள ஏற்படுத்துவதால் உங்கள் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் ஏற்படும் என்ற அச்சம். அது நீண்ட காலமாக காணப்பட்டது. இணக்கப்பாட்டிற்காக சில சலுகைகளை நீங்கள் வழங்கினால் உங்கள் நல்லெண்ணம் உங்களிற்கு எதிராக மாறும் என்ற அச்சங்கள்.

மூன்று தசாப்தகால மோதலிற்கு பின்னர் இது தெளிவாக புரிந்துகொள்ளப்படவேண்டிய விடயமே- இது அர்த்தமுள்ள விடயமும் கூட. இந்த அச்சங்கள் இலகுவில் கற்கமுடியாததவைகள். அவை நீடித்திருந்து குருதியில் தங்கியிருக்க கூடியவை. சிலவேளைகளில் மரபணுக்களில் கூட அவை காணப்படலாம். ஆனால் அச்சம் எங்களை ஆட்சிபுரிவதற்கு நாங்கள் அனுமதிக்க முடியாது. நம்பிக்கையின்மை மற்றும் சச்சரவு காணப்படும் வட்டத்தை நாங்கள் உடைப்பதை இந்த அச்சம் தடுப்பதற்கு நாங்கள் அனுமதிக்க முடியாது.

இவ்வாறான அச்சங்களிற்கு பலியாககூடியது இலங்கை மாத்திரமல்ல என்பதை நான் வலியுறுத்த விரும்புகிறேன். எனது தேசத்தை பாருங்கள், எங்களது அரசியல் சொல்லாடல்களில் தீவிரமான அழிவை ஏற்படுத்தக்கூடிய அச்சம் ஆக்கிரமிக்க தொடங்கியுள்ளது.

பாரிஸ் தாக்குதல்களை தொடர்ந்து பல அதிகாரிகள்- அரச ஊழியர்கள் அகதிகள் குறித்த எங்கள் மக்களின் அச்சத்திற்கு தூபமிடும் வகையில் கருத்து தெரிவித்துள்ளனர். குண்டு தாக்குதல்களால் பாதிக்கப்பட்டவர்களை, மத ஓடுக்குமுறைகளை எதிர்கொண்டவர்களை, நாங்கள் தவிர்க்கவேண்டும் என தெரிவித்துள்ளனர். இவை இலங்கை தனக்கு பொருத்திப்பார்க்ககூடிய உதாரணங்கள், எங்கள் நாடடில் அடைக்கலம் கோருபவர்களிற்கு நாங்கள் மதபரிசோதனையை மேற்கொள்ளவேண்டும், அல்லது மத அடிப்படையில் முழு மக்களையும் முழுமையான கண்காணிப்பின் கீழ் வைக்கவேண்டும் என சிலர் ஆலோசனை வழங்குகின்றனர். இது ஒரு மூர்க்கத்தனமான விடயம், இது ஒரு தாக்குதல், இது அமெரிக்கா உறுதியாக பின்பற்றும், ஆழமான துயரங்களை எதிர்கொண்ட மக்களிற்கு அடைக்கலம் அளிக்கும் பெருமை மிக்க நீண்ட கால பாரம்பரியத்திற்கு பாதிப்பை ஏற்படுத்துகின்றது.

எனினும் தலைவர்களும், சமூகங்களும், தனிநபர்களும் அவ்வாறான அச்சங்களால் ஆளப்படும் நிலையை தவிர்க்கலாம். இதுவே நான் சுட்டிக்காட்டவிரும்பும் மூன்றாவதும் இறுதி விடயமுமாகும். நாங்கள் அச்சமடையும் மனிதர்களை அறிந்துகொள்வதற்கு நாங்கள் தைரியம்மிக்கவர்களாக விளங்கவேண்டும். ஏனெனில் நாங்கள் அவர்களை கண்டுபிடிக்கும்போது. அவர்கள் எங்களைவிட

வித்தியாசமானவர்கள் இல்லை என்பதை உணர்கின்றோம். ஜனாதிபதி பராக் ஒபாமா இந்த வாரம் ஆசியான் மாநாட்டிற்காக மலேசியா சென்றதை உங்களில் சிலர் பார்த்திருப்பீர்கள். வெள்ளிக்கிழமை அவர் அகதிச்சிறுவர்களிற்கு உதவும் அமைப்பு ஒன்றிற்கு விஜயம் மேற்கொண்டார். அமெரிக்காவால் விரைவில் புகலிடம் அளிக்கப்படவுள்ள சிறுவர்களை அவர் சந்தித்தார். இவர்களில் ஒருவரான 16வயது ரொகிங்கியா யுவதி தான் மியன்மாரிலிருந்து எவ்வாறு தனது 8 வயதில் தப்பியோடி வந்தார் என்பதையும், ஆள்கடத்தல் கும்பலிடம் சிக்கிக்கொண்டதையும் ஜனாதிபதியிடம் தெரிவித்தார். தன்னை அந்த ஆபத்திலிருந்து காப்பாற்றிக் கொண்டுள்ள அவர் தற்போது அதேநிலையிலுள்ள ஏனைய சிறுவர்களிற்கு உதவ விரும்புகின்றார். அவரிற்கு அருகில் அமர்ந்திருந்த ஜனாதிபதி ஒபாமா இவ்வாறு தெரிவித்தார் 'இந்த குழந்தைகளை சந்திப்பதற்கான வாய்ப்பினை பெறும் எவரும் இவர்கள் எவ்வளவு தூரத்திற்கு எங்கள் குழந்தைகளை போன்றவர்கள் என்பதை உணருவார்கள். ஆகவே இவர்களிற்கு அன்பும் பாதுகாப்பும், ஸ்திரதன்மையும் கல்வியும் அவசியம்'' என்றார். அதன் பின்னர் ஜனாதிபதி அந்த யுவதியை கட்டியணைத்தார். அது உலகம் முழுவதும் கேட்டது, அது மிகவும் அழகானது.

இலங்கையின் எதிர்காலம் குறித்து மக்கள் கருத்து தெரிவிக்கும் போது அவர்கள், அனைவரையும் அரவணைப்பது உள்வாங்குவது குறித்த செய்தியை மேலிருந்து கீழாக தெரிவிக்கவேண்டும் என அனேகமாக குறிப்பிடுகின்றனர். மேலும் அனைத்து சமூகங்களும் தங்கள் குரல்கள் செவிமடுக்கப்படுவதாக உணர்வதையும் உறுதி செய்யவேண்டும். எங்கள் சமூகங்கள் அதிகளவிற்கு உள்வாங்கும் தன்மை கொண்டவையாக விளங்குவதை உறுதிசெய்வதில் அரசாங்கங்களிற்கு முக்கிய பங்குள்ளது என்பது உண்மை. எனினும் உண்மை என்னவென்றால் உண்மையான உள்வாங்கும் தன்மையை கீழிலிருந்து மேலாக உருவாக்கவேண்டும், உங்களை போன்றவர்கள். இது ஜனாதிபதி வெளிப்படுத்தியது போன்று பச்சாதாபம் மிக்க செயல்களால் உருவாக்கப்படுகின்றது. ஏனையவர்களும் எங்களை போன்றவர்கள் என்பதை அறிவது, அவர்களுடைய குழந்தைகள் எங்கள் குழந்தைகளை போன்றவர்கள் என்பதை அறிவது.

உங்கள் முன் ஒரு உதாரணத்தை முன்வைக்கவிரும்புகின்றேன், 2012இல் இலங்கையின் பிரபல எழுத்தாளர் சியாம் செல்லதுரையும் தேசிய சமாதான பேரவையும் இணைந்து இலங்கையின் எதிர்கால எழுத்தாளர்கள் கவிஞர்களாக விரும்புவர்களை ஒன்றிணைந்து நாட்டில் இடம்பெற்ற மோதல்களின் போது அவர்கள் எதிர்கொண்ட மிககடினமான தருணங்கள் குறித்து எழுதச்செய்யும் திட்டமொன்றை ஆரம்பித்தனர். அதில் கலந்துகொண்டவர்கள் வெவ்வேறு மத சமூக பிரிவுகளில் இருந்து தெரிவுசெய்யப்பட்டார்கள், சியாம் செல்வதுரை நல்ல எழுத்துக்கள் பச்சாதாபத்தையும் சமூகங்கள் மத்தியில் பாலங்களை அமைப்பதற்கான வாய்ப்பையும் உருவாக்குகின்றன என தெரிவித்தார். அது நல்லிணக்கத்திற்காக எழுதுதல் என அழைக்கப்பட்டது.

அதில் கலந்துகொண்ட 23பேரில் ஒருவர் யாழ்ப்பாணத்தை சேர்ந்த சாம்பவி சிவராஜ். யுத்தம் மிகவும் தீவிரமாக இடம்பெற்றவேளையில் அவர் கல்வி பயின்ற பாடசாலை தனக்கான பாடப்புத்தகங்களை கொண்டுசெல்வதற்கு கூட அனுமதி வழங்கப்படவில்லை, இதன் காரணமாக அவரது ஆசியர் கொழும்பிற்கு சென்று அந்த பாடப்புத்தகங்களை பிரதியெடுத்து வந்தார் அதனை 40 மாணவர்கள் பகிர்ந்துகொண்டனர். அவர் பாடசாலைக்கு செல்லும் வழியில் காணப்பட்ட இராணுவ வீதிதடைகள் காரணமாக சாதாரண பயணம் இடர் மிகுந்த இரண்டு மணித்தியால பேருந்து பயணமாக விளங்கியது.

ஆனால் சாம்பவியை பொறுத்த தனது அனுபவத்தை பகிர்ந்துகொண்டதே இந்த திட்டத்தின் மிகவும் பயனுள்ள விடயமாக காணப்படவில்லை மாறாக அவர் ஏனைய சமூகத்தினரின் அனுபவங்களை கேட்டதே மிகவும் பயனுள்ள விடயமாக காணப்பட்டது, இந்த அனுபவங்களை அவர் கேள்விப்பட்டிருக்க முடியாது. தங்கள் வீடுகளில் இருந்து பெற்றோரிடமிருந்து

துரத்தப்பட்டவர்கள் அல்லது துஸ்பிரயோகங்களால் பாதிக்கப்பட்டவர்கள். தனது பார்வை விசாலமாக்கியதன் காரணமாக தான் இதுவரை நாடு குறித்து கொண்டிருந்த எண்ணங்கள் நிரந்தரமாக மாறியதாக சாம்பவி தெரிவித்தார். அவர் தற்போது கொழும்பு பல்கலைகழகத்தில் இரண்டாவது ஆண்டு மாணவி, அவர் இன்று எங்களுடன் இருக்கின்றார், சாம்பவி எங்கே இருக்கிறீர்கள் ஏன் நீங்கள் சில நிமிடங்கள் எழுந்திருக்க கூடாது நாங்கள் உங்களிற்கு தருவோம்-( கைதட்டல்)

நான் தற்போது இங்கிருக்கும், சமரசத்தை ஏற்படுத்துவதற்கான எழுத்து திட்டத்தில் கலந்துகொண்டவர்களை எழுந்து நிற்குமாறு கேட்டுக்கொள்கிறேன், நாங்கள் உங்களிற்கு நல்ல கைதட்டல்களை வழங்குவோம், ஆகவே அந்த குழுவினர் தான் இங்கிருக்கிறீர்களா? ஏனையவர்கள் இல்லையா? அனைவரும் வெட்கப்படுகின்றீர்களா? ஆம் அவர்கள் வெட்கப்படுகின்றார்கள்? நான் அப்படித்தான் நினைத்தேன்( கைதட்டல்கள்)

சமரசத்தை ஏற்படுத்துவதற்கான எழுதுதல் திட்டத்தின் அளவு சிறியதாக காணப்படலாம், ஆனால் அது ஏற்படுத்திய தாக்கம் மிகப்பெரியது. ஏனெனில் சாம்பவியும் அவரது சகாக்களும் எழுதிய கதைகள் இறுதியில் நூல்வடிவம் பெற்றன, பின்னர் அவை இலங்கை முழுவதிலும் உள்ள பாடசாலைகள் மத்தியில் பகிரப்பட்டுள்ளன. அந்த திட்டத்தின் மூலம் தெரிவிக்கப்படும் பாடம் மிக முக்கியமானது: நாங்கள் ஏனையவர்களை செவிமடுப்பதற்கு அறிவதற்கு முயற்சிகளை மேற்கொள்ளும்போது நாங்கள் மேலே குறிப்பிட்ட அச்சங்களிற்கு பலியாகும் வாய்ப்புகள் குறைவடையும், நாங்கள் இந்த மக்கள் எங்களில் இருந்து வித்தியாசமானவர்கள் இல்லை என்பதை அறிவோம், ஆகக்குறைந்தளவிற்கு அந்தளவு வித்தியாசமானவர்கள் இல்லை என்பதை, எங்களை ஏனையவர்கள் கௌரவத்துடன் நடத்தவேண்டும் என நாங்கள் விரும்புவதை போல நாங்கள் அவர்களை கௌரவமாக நடத்துவோம்.

உங்களால் அந்த பொன்னான விதிமுறையை அனைத்து மதங்களிலும் காணமுடியும், இந்த அற்புதமான நாட்டில் பின்பற்றப்படும் மதங்களிலும். பௌத்தத்தில் இந்த தங்கவிதிமுறை இவ்வாறு காணப்படுகின்றது: நீங்கள் எப்படி காயம்படவிரும்பமாட்டீர்களே அந்த வகையில் ஏனையவர்களை காயப்படுத்தவேண்டாம், இந்து சமயம் -ஏனையவர்கள் எதனை உங்களிற்கு செய்வதற்கு விரும்பமாட்டீர்களோ அதனை ஏனையவர்களிற்கு செய்யவேண்டாம்,---மதங்களும் ஏனையவர்களும் போதிக்கும் அடிப்படை பச்சாதாபங்களை நீங்கள் உங்கள் பாடசாலைகளிலும் அலுவலகங்களிலும் வளர்த்தெடுக்கலாம். உங்கள் பெற்றோர்களுடனும் உங்கள் பிள்ளைகளுடனும். அது உங்கள் சமூகத்தை பிணைக்கும் நூலாக காணப்படும், ஏனையவர்கள் நிச்சயமாக உங்கள் சமூகத்தை உடைக்க முயலும்போது அதனை இறுக்கமாகவைத்திருக்கும்.

நான் இத்துடன் முடித்துக்கொள்ளவிரும்புகின்றேன் அதன் மூலம் நாங்கள் ஆராயலாம் கேள்விகளை கேட்கலாம். இலங்கை சில வாரங்களிற்கு முன்னர் தனது பெருந்தலைவர் சோபிததேரரை இழந்தது உங்களிற்கு தெரியும். நாடு எதிர்கொண்டுள்ள பல விவகாரங்களில் தார்மீக வழிகாட்டியாக அவர் விளங்கினார், நிறைவேற்று அதிகாரங்களை கட்டுப்படுத்தவேண்டியதன் அவசியம் ,கருத்துச்சுதந்திரத்தை பாதுகாக்கும் புனிதம். ஆனால் அவர் சமூகங்கள் மத்தியில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தவேண்டியது குறித்து ஆழந்த வாஞ்சை கொண்டவராகவும் அதனை தனது உரைகள் மூலம் வெளிப்படுத்தியவராகவும் காணப்பட்டார். பௌத்தர்கள், இந்துக்கள் முஸ்லீம்கள் மலாயர்கள், பறங்கியர்கள் வாழும் சிறிய தீவு இலங்கை, நாங்கள் எப்படி ஒன்றிணைந்து வாழவேண்டும் எனபது குறித்து சிந்திக்கவேண்டும், எப்படி பிரிந்து வாழவேண்டும் என்பது குறித்து அல்ல, நாங்கள் எங்களிற்குள் பிளவுபட்ட ஒவ்வொரு தரமும் தோல்வியே ஏற்பட்டுள்ளது, 30 வருட யுத்தத்தில் யாரும் வெற்றிபெறவில்லை, நாங்கள் தோல்வியடைந்துள்ளோம் என அவர் தெரிவித்தார்.

செய்திகளை பார்க்கும்போது உலகின் பல பகுதிகள் சோபிததேரர் குறிப்பிட்ட அந்த பிரிவினைபோக்கினால் சிதறுண்டுபோவதை அவதானிக்க முடிகின்றது. கடந்த சில வாரங்களை மாத்திரம் எடுத்துக்கொள்ளுங்கள் : அங்காரா, சினாய், பெய்ரூட், பாரிஸ், பமாக்கோ. இது நம்பிக்கையற்ற ஒரு மனோநிலைய உணர்வை ஏற்படுத்தலாம். இதன் காரணமாகவே நீங்கள் இங்கு இலங்கையில் முன்னெடுக்கும் நடவடிக்கைகள் முக்கியமானவையாகின்றன. நிச்சயமாக உங்கள் சொந்த மக்களிற்கும் இந்த தீவிலிருந்து வெகு தொலைவில் உள்ள மக்களிற்கும். உலகம் முழுவதிலும் உள்ள மக்கள் இலங்கையை உன்னிப்பாக அவதானிக்கின்றனர், நீங்கள் இங்கு முன்னெடுத்துள்ள செயற்பாடுகள் குறித்து நாங்கள் பேசிக்கொள்கின்றோம், உங்கள் முயற்சிகளிற்கு நாங்கள் முழுமையான ஆதரவை வழங்குகின்றோம்.

இது விசேடமாக அமெரிக்காவில் உண்மையான விடயம்: இலங்கையில் என்ன நடக்கின்றது? அவர்கள் எவ்வாறு செயற்படுகின்றனர், பயங்கரவாத தடைச்சட்டம் குறித்து என்ன செய்கின்றனர்? நிலங்களை மீள கையளிப்பது குறித்து என்ன இடம்பெறுகின்றது? நல்லிணக்கம் குறித்து என்ன செய்கின்றனர்? மக்கள் கேள்விகளை கேட்கின்றனர், அவர்கள் இங்கு என்ன நடைபெறுகின்றது என்பதை அறிய விரும்புகின்றனர், இளம் தலைமுறையினரின் நிலை எவ்வாறுள்ளது? வேலைவாய்ப்புகள் எவ்வாறு உள்ளன? இலங்கையில் என்ன நடைபெறுகின்றது, மக்கள் அறிய விரும்புகின்றார்கள், மிகப்பாரிய சவால்கள் என எண்ணவைக்ககூடியவைக்கு எனக்கு தெரியும் தீர்வை காண நீங்கள் முயலும்போது நாங்கள் உங்கள் பக்கத்தில் உள்ளோம்.

சிலநேரங்களில் மாற்றங்கள் நாங்கள் எதிர்பார்த்த வேகத்தில் இடம்பெறவில்லை என்ற உணர்வுதோன்றலாம் என்பது எனக்கு தெரியும். உண்மையான சீர்திருத்தங்களை விரும்புவர்களிற்கு மாற்றங்கள் மிகமெதுவாக நடைபெறுவது போலவே தோன்றும். உங்கள் குரல்கள் செவிமடுக்கப்படும் நிலையை உருவாக்குவதற்கான அர்ப்பணிப்புகளை ஆட்டம் காணசெய்வதற்கோ அல்லது ஏனையவர்களின் குரல்களை நீங்கள் செவிமடுப்பதை தடுப்பதிற்கோ உங்கள் பொறுமையின்மை காரணமாக அமைந்துவிட அனுமதிக்க கூடாது. நீங்கள் அதிகளவு பொறுமையிழந்த நிலையில் காணப்படும் போது அதுவே நீங்கள் அதிகளவிற்கு ஈடுபாட்டை காண்பிக்கவேண்டிய தருணமாகும், குறைந்தளவு அல்ல, அதுவே உங்களை வேண்டுகோள்விடுக்க உதவும், இறுதியில் உங்களிற்கும் உங்கள் தேசத்திற்கும் மிகவும் அவசியமாகவுள்ள மாற்றங்களை சாதிப்பதற்கு உதவும்.

ஆகவே தொடர்ந்தும் ஈடுபாட்டுடன் இருங்கள், அச்சம் உங்களின் மோசமான ஆலோசகராக அனுமதிக்க வேண்டாம், பச்சாதாபம் என்பது ஏனையவர்களின் கௌரவத்தை நீங்கள் உணர்வதற்கு உதவட்டும், இதனை பின்பற்றுங்கள், நீங்களும் உங்கள் நாடும் சாதிப்பதற்கு எல்லையேயில்லை.

மிக்க நன்றி (கைதட்டல்கள்) கேள்விகளிற்கான நேரம்.

**நெறிப்படுத்துபவர்**-தற்போது சில கேள்விகளை கேட்கலாம் என நான் கருதுகிறேன்

**தூதுவர் பவர்** - நிச்சயமாக

**கேள்வி** - இலங்கைக்கு மீண்டும் வருகை தந்ததிற்கு வரவேற்பு - அமெரிக்க மற்றும் இலங்கை அரசாங்கம் குறித்த ஐக்கியநாடுகளின் அனுமானம் குறித்து எடுத்துசொல்லுங்களேன்?

**தூதுவர் பவர்** - ஒலிவாங்கியுள்ளதா? ஆம்

**கேள்வி** - இலங்கை மற்றும் அமெரிக்க அரசாங்கங்கள் அனுசரனை வழங்கிய ஐக்கியநாடுகள் மனித உரிமை பேரவை தீர்மானம் குறித்த கேள்வி (தெளிவற்றதாக உள்ளது) அடுத்த கட்ட சீர்திருத்தங்கள் மாற்றங்கள் குறித்த உங்கள் எண்ணங்கள், இலங்கையில் நீங்கள் காணும்

அடுத்த கட்டம் என்ன (தெளிவற்றதாகவுள்ளது) தீர்வு என்னவென்பது மாத்திரமல்ல தீர்மானம் என்னவென்பது குறித்தும், இலங்கையைப் பொறுத்தவரை அதனை சாதிப்பதில் என்ன இருக்கின்றது? மேலும் (தெளிவற்றதாகவுள்ளது)

**தூதுவர் பவர்:** முதலில் நான் உங்களிற்கு தெரிவிக்கவிரும்பகின்றேன் அது பிரமாதமான ஒரு அனுபவம். இந்த நாட்டில் நீதி மற்றும் நல்லிணக்கம் குறித்த எண்ணங்களை ஊக்குவிப்பதற்கு நீண்ட காலமாக பாடுபட்ட பலரிற்கும் அப்படியே இருந்திருக்க வேண்டும். இலங்கை செப்டம்பரில் ஐக்கிய நாடுகள் மனித உரிமை தீர்மானத்திற்கு ஆதரவை தெரிவிப்பதை மாத்திரமல்ல அதற்கு அனுசரணை வழங்குவதை காண்பதும். இது முன்னைய அரசாங்கம் அதனை எதிர்த்த பின்னர் இடம்பெற்றுள்ளது. நான் நினைக்கிறேன் மூன்று முன்னைய தீர்மானங்களையும், அந்த தீர்மானங்களிற்கு எதிராக மிகதீவிரமான பிரச்சாரங்களை அது முன்னெடுத்தது, ஆனால் அந்த தீர்மானங்கள் கடும் போக்கானவையல்ல, பாரிய குற்றங்களில் ஈடுபட்டவர்களை பொறுப்புக் கூறச்செய்வதற்காக உள்நாட்டு செயற்பாட்டை அது கோரியிருந்தது,

ஆகவே அடுத்த கட்ட நடவடிக்கைகளை பொறுத்தவரை நீங்களும் ஏனையவர்களும் அது உறுதிப்படுத்தப்படுவதற்கு உதவி புரிந்துள்ளீர்கள், தீர்மானத்தில் முதற்கட்டமாக எழுதப்பட்டுள்ளது. கலந்தாய்வு செயற்பாடுகள் என்பவை மிகவும் முக்கியமானவை. வடபகுதி நேற்று சென்றிருந்ததன் காரணமாக, நாட்டின் எந்த பகுதிக்கு நீங்கள் சென்றாலும் வெவ்வேறு குடும்பங்களை யுத்தம் எவ்வாறு பாதித்துள்ளது என்ற வெவ்வேறு விதமான தகவல்கள் வெளியாகும் என்பது எனக்கு தெரியும், ஆகவே இந்த நாடடில் உள்ள அனைவருக்கும் தங்களை வெளிப்படுத்துவதற்கான குரல் காணப்படவேண்டும், இந்த செயற்பாடுகள் எப்படி அமைய வேண்டும் என்பது குறித்த தங்கள் கருத்தை எப்படியோ அவர்கள் வெளிப்படுத்த வேண்டும்.

ஆகவே கலந்தாய்வு மிகவும் முக்கியமானது, யுத்தத்தினாலும், பயங்கரவாதத்தினாலும் மிகவும் பாதிக்கப்பட்ட பல சமூகங்கள் தாங்கள் குரலற்றவர்களாக காணப்படுவதாகவும், தங்கள் கௌரவம் மதிக்கப்படவில்லை எனவும் கருதுகின்றன, அவர்கள் காணமற்போன குடும்பத்தவர்களின் புகைப்படங்களுடன் ஓவ்வொரு பகுதியாக அலைந்துகொண்டுள்ளனர், அவர்களுடைய தொலைபேசி அழைப்பிற்கு எவரையும் பதில் சொல்ல செய்யமுடியாத நிலையில் அவர்கள் உள்ளனர். ஆகவே இதனை ஆழமானதாகவும், பரந்துபட்டதாகவும் மாற்றுவதற்கு கலந்தாய்வுகள் அவசியம், மேலும் முன்னோக்கி நகர்வதற்கான விருப்பமும் காணப்படுகின்றது. மேலும் இந்த கட்டமைப்புகள் மிகவிரைவில் ஸ்தாபிக்கப்பட வேண்டும் என விரும்புகின்றோம், ஆனால் இந்த கலந்தாய்வுகள் மிகமிக முக்கியமானவை.

மோதல்கள் காரணமாக மிகவும் மோசமாக பாதிக்கப்பட்ட சமூகத்தினர் இதனை ஏற்றுக்கொள்வதும் அங்கீகரிப்பதும் மிகவும் முக்கியம், அதுவும்- நிச்சயமாக அது ஒரு பகுதியாகவே காணப்படும், கலந்தாய்வுகள் மற்றும் பாதிக்கப்பட்ட சமூகத்தினர் இதனை ஏற்றுக் கொள்ளச் செய்வதன் காரணமாக, அதேவேளை உருவாக்கப்படும் கட்டமைப்புகளின் தரமும் மிகவும் முக்கியமானது. நான் இன்னொன்றை தெரிவிக்க விரும்புகிறேன், நான் இங்கிருந்த சில நாட்களில் சிவில் சமூகத்தினர் இந்த விடயத்தில் வெளிப்படுத்தும் ஆர்வம் மற்றும் தங்களை ஈடுபடுத்தும் முறை என்னை கவர்ந்துள்ளது, பொறுப்புக்கூறும் செயற்பாடுகள் எவ்வாறு அமையவேண்டும் என்பது குறித்து ஆராயும் செயற்பாடுகளாகவே தற்போதைக்கு இவை காணப்படுகின்றன, அரசாங்கம் தனது வழமையான வட்டாரங்களிற்கு அப்பால் எவ்வளவு தூரம் கலந்துரையாடல்களை மேற்கொள்கின்றது என்பதும் முக்கியம்,

நான் இங்கு மீண்டும் வலியுறுத்த விரும்புகின்றேன்-குடும்பங்கள் தங்களிற்கு நீதி கிடைத்துள்ளதாக, கௌரவம் வழங்கப்பட்டுள்ளதாக உணரகூடிய ஒரு செயல்முறை குறித்து நாங்கள் மிகுந்த ஆர்வம் கொண்டுள்ளோம். பாதிக்கப்பட்ட சமூகங்களாலும் முழு சர்வதேச சமூகத்தினாலும் அது நியாயபூர்வமானதாகவும், நம்பகத்தன்மை மிக்கதாகவும் பார்க்கப்படுவது

அவசியம், ஏனெனில் நாட்டின் இந்த அத்தியாயத்தை கைவிட்டுவிட்டு முன்னோக்கி நகர்வதற்கு அனைவரும் ஆர்வமாகவுள்ளனர், எனினும் மக்கள் உண்மையை அறிவதற்கு உதவும், தண்டனையின் பிடியிலிருந்து விலக்களிக்கும் கலாச்சாரத்தை முடிவிற்கு கொண்டுவருவதற்கும்( துரதிஸ்டவசமாக இலங்கையில் நீண்ட காலமாக ஆழமாக வேரூன்றியுள்ளது) உதவும் வகையில் இந்த செயல்முறைகள் அமைவது அவசியம்.

ஏனையவர்கள், எவரும் வெட்கமடையதேவையில்லை, எது குறித்தும் கேள்வி கேட்கலாம்

**கேள்வி-** இலங்கையின் நல்லிணக்கத்திற்கு நாட்டின் இளைஞர்களால் எவ்வாறான பங்களிப்பை வழங்க முடியும்?

**தூதுவர் பவர்:** நன்றி, இளைஞர்கள் எவ்வாறான வழிகளில் பங்களிப்பை செய்யலாம் என்பது குறித்த ஆலோசனைகளை வழங்குவதில் நான் நிபுணத்துவம் மிக்க ஒருவராக நடிக்கமாட்டேன், ஆனால் இது அனைத்தும் உங்களை பொறுத்தது என என்னால் தெரிவிக்க முடியும், ஒரு வகையில் உங்களுடைய தலைமுறையே-பயங்கரவாதம் குறித்து அச்சப்படுவது அல்லது யுத்தத்தின்போது காணப்பட்ட இழப்புகள் குறித்து உங்களிற்கு பலரிற்கு இன்னமும் தெளிவான ஞாபகங்கள் இருக்கும் என நான் நினைக்கின்றேன் அல்லது உங்கள் குடும்பத்தில் இடம்பெயர்ந்த நபர் ஒருவர் காணப்படலாம் அல்லது நீங்களே இடம்பெயர்ந்திருக்கலாம் அல்லது உங்கள் குடும்ப உறுப்பினர்களை நீங்கள் இழந்திருக்கலாம் அவர்கள் காணமற்போயிருக்கலாம்,

ஆகவே அதனை அனுபவித்த இளம் தலைமுறையினரால் அதனை கடந்துசென்று ஏனைய சமூகங்களுடன் நட்புப்பாலத்தை ஏற்படுத்த முடியுமென்றால், தங்களுடைய அடையாளங்களை பரந்துபட்ட அளவில் இலங்கை பிரஜைகள் என பார்க்க முடியுமானால், இந்த நாட்டின் பல்லினத் தன்மை குறித்த பெருமிதத்துடனும், ஆகவே பல்முகத்தன்மை என்பது இங்கேயே உரிய அர்த்தத்தை பெறுகின்றது, 'நான் ஒரு இலங்கையன் அதன் அர்த்தம் அனைத்துமே-"இது வேறுபாடுகள் துருவமயப்படுத்தலிற்கு வழிவகுக்கும் என்பதற்கு மாறானது, அது கடந்த காலங்களில் நிகழ்ந்தது, அது ஆச்சரியமளிக்க கூடியது,

ஆகவே நான் இந்த நாட்டின் மாணவர்கள் குறித்து சிந்தித்தால், கடந்த தசாப்தங்களில் அவர்கள் அரசியலில் அதிக ஈடுபாட்டை வெளிப்படுத்தியிருப்பதாக நான் கருதுகிறேன், அவர்கள் தங்கள் நாட்டின் எதிர்காலத்தின் திசையை மாற்றவேண்டியது தாங்களே என கருதுவார்களானால், இளம் தலைமுறையினர் இந்த வழிமுறைகளில் தற்போது ஈடுபட்டுள்ளார்கள் என நான் கருதுகிறேன், அவர்கள் அரசியலிலும், பொதுச்சேவையிலும் ஈடுபடுவது என்னை பொறுத்தவரை மிகவும் கடினமானது, நான் ஒரு பத்திரிகையாளராகவும் செயற்பாட்டாளராகவும் சுதந்திரமான வாழ்வை வாழ்ந்துள்ளேன், எனது மனதில் உள்ளதை தெரிவிப்பதற்கான நிலையில் வாழ்ந்துள்ளேன், அரசாங்கத்தை பற்றி முறையிடுவது. அரசாங்கத்தில் இணைவதற்கு முன்னர் எனது வாழ்வின் பெரும்பகுதியை அவ்வாறே கழித்துள்ளேன், (சிரிப்பு) அது பெரிய மாற்றம் நீங்கள் வெளியில் இருந்துவிட்டு பாரிய நிர்வகத்திற்குள் செல்வது.

இலங்கை போல நாங்கள் அதிகாரிகள் அதிகாரம் செலுத்தும் தேசம் இல்லை, அதிகாரிகளின் செல்வாக்குகள் தாமதங்கள், அமைச்சர்கள் போன்ற விடயங்கள்,- ஆனால் நாங்கள் அதனைவிட மோசமான அதிகாரிகள் வர்க்கத்தை கொண்டுள்ளோம் (சிரிக்கின்றார்) உங்களை போன்றே நாங்களும் திறமையானவர்கள். அது மிகவும் கடினமானது. இளவயதினர் பொறியிலாளர்களாகவோ அல்லது கட்டிட கலைஞர்களாகவோ் அல்லது தொழில்நுட்ப உத்தியோகத்தர்களாகவோ, தொழில் முனைவோர்களாகவோ வரமுடியும். உங்களால் சாதிக்ககூடிய பல விடயங்கள் உள்ளன என சொல்கிறேன் உங்களிடம் அவ்வளவு திறைமைகள் உள்ளன. நீங்கள் ஆசிரியராகலாம். ஆனால் உங்களில் ஒருவர் அரசாங்கத்திற்குள் நுழைய விரும்பினால், சிவில்சேவையில் இணையவிரும்பினால், பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும்

ஒருவராக போட்டியிட்டால்- பராளுமன்றமே இந்த பல கேள்விகளிற்கான விடைகளை தீர்மானிக்ப்போகின்றது. நீங்கள் தொலைக்காட்சியில் அரசியல்வாதிகள் விவாதம் செய்வதை பார்த்தவுடன் வேறு அலைவரிசைக்கு மாற்றவேண்டும் என்ற மனோநிலை தோன்றினால் அதுவே நீங்கள் அரசியல்வாதியாக வேண்டும் என்பதற்கான அறிகுறியதுவே, நீங்கள் அந்த அலைவரிசையை மாற்ற விரும்பினால் நீங்கள் அதனை செய்யவேண்டும், அங்கு செல்லுங்கள் நிலைமை எவ்வாறுள்ளது என்பதை பாருங்கள், உங்களிற்கு அந்த அரசியல் பிடிக்காவிட்டால் மாற்றத்தை ஏற்படுத்துங்கள்,

புதிய அரசாங்கம் புதிய எண்ணங்களை இளவயதினரின் உணர்வுகளை விரும்புகின்றது என நான் நினைக்கின்றேன், நிச்சயமாக அவர்கள் தாங்கள் செய்யும் அனைத்தும் அடுத்த தலைமுறைக்கானது என அவர்கள் குறிப்பிடுகின்றனர். நாங்கள் அமெரிக்கா அவர்களிற்கு ஆதரவளிப்பதற்கு இது ஒரு காரணம் என நான் கருதுகிறேன், ஆனால் எவ்வளவு சவாலானதாக அது காணப்பட்டாலும் அதற்குள் ஈடுபடுவது மிகப்பெரிய விடயம் என நான் கருதுகிறேன்

**வேறு கேள்விகள்.**

**கேள்வி-** தூதுவர் அவர்களே இது அக்கறையின்மைக்கு எதிரான செயற்பாட்டமைப்பை சேர்ந்த இசான் ஜலீல், உங்களிற்கான எனது கேள்வி இது கேள்வியும் அறிக்கையும், இவ்வருடம் ஜனவரி 8 ம் திகதிக்கு முன்னர் நாங்கள் மனித உரிமைகள் குறித்து பேசியிருந்தால் எங்களை துரோகிகள் மேற்குலகத்துடன் இணைந்து ஏதோ சதியில் ஈடுபடுபவர் எனசித்தரித்திருப்பர், எனினும் இலங்கையை பொறுத்தவரை ஜனவரி 8 ம் திகதிக்கு பின்னர் அதிஸ்டவசமாக இந்த நிலை மாறியுள்ளது,

இராஜதந்திரியாவதற்கு முன்னர் மனித உரிமை விவகாரங்களில் தீவிரபங்காற்றியவர் என்ற வகையில் மனித உரிமைகளை பாதுகாப்பது ஊக்குவிப்பது இந்த நாட்டை மனித உரிமைகள் மதிக்கப்படும் நாடாக எவ்வாறு மாற்றுவது என்பது குறித்து இளைஞர்களிற்கு என்ன அறிவுரையை வழங்க விரும்புகிறீர்கள்?

**தூதுவர் பவர்-**நன்றி முதலில் உங்கள் கருத்திற்கு நான் பதிலளிக்கிறேன். ஏன் என்றால் அது மிகவும் முக்கியமானது, இலங்கையில் இடம்பெற்றது உலகம் முழுவதிலும் உள்ள நாடுகள் பலவற்றில் இடம்பெறுகின்றது, சிலவேளைகளில் கட்சிகளை சேர்ந்த அரசியல்வாதிகள் மக்களின் கவனத்தை திசைதிருப்ப முயல்கின்றனர், அவர்களால் வெளிநாட்டவர்கள் அல்லது மேற்குலகம் மீது குற்றச்சாட்டை சுமத்துவதற்கான காரணங்களை கண்டுபிடிக்க முடிகின்றது, அல்லது காலனித்துவத்தை குறைகூறுகின்றனர், வரலாறுகள் தொடர்பில் பலவகையான குற்றச்சாட்டுகள் உலாவுகின்றன, தற்காலம் குறித்தும் பலவகையான நியாயபூாவமான விமர்சனங்கள் முன்வைக்கப்படுகின்றன

ஆனால் இந்த மாற்றங்களை பொறுத்தவரை என்ன முக்கியமானது என்றால் இதற்கும் வெளியுலகிற்கும் தொடர்பில்லை, இலங்கை மக்கள், தங்கள் சகாக்கள் கொல்லப்பட்டதை அல்லது காணமற்போனதை அனுபவித்த ஊடகவியலாளர்கள், அச்சங்களிற்கு மத்தியிலும் தாங்கள் பார்த்ததை எழுதியவர், கொள்கைகள் எவ்வாறு காணப்படவேண்டும் என்பது குறித்து அவர்கள் தொடர்ச்சியாக ஆசிரிய தலையங்கங்களை எழுதினர், இளம் தலைமுறையினரே வாக்களித்தனர். பலர் முதற்தடவையாக.

ஆகவே இது முழுமையாக இலங்கையின் கதை, உங்கள் நாட்டில் இடம்பெற்றதும், பின்னர் ஜெனீவாவில் இடம்பெற்ற நடவடிக்கைகளும் இலங்கைக்கு வெளியே தீட்டப்பட்ட திட்டங்கள் போல சித்திரிக்கப்பட்டன, இலங்கையின் சிவில் சமூகமே தங்களை மீண்டும் ஸ்தாபிப்பதற்கான உதவியை எதிர்பார்த்தது, உள்நாட்டில் பொறுப்புக்கூறும் பொறிமுறை காணப்பட்டிருந்தால், ஏதாவது கருவிகள் காணப்பட்டிருந்தால். அந்த குடும்பங்களிற்கு நிம்மதியை வழங்குவதற்கு

கடந்த தசாப்த்தத்தில் பொறிமுறை ஏதாவது இருந்திருக்குமானால், பிரிவினைக்கு பதில் ஜனநாயகத்தை பலப்படுத்துவதற்கான நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கான பொறிமுறைகள் காணப்பட்டிருக்குமாயின், ஐக்கிய நாடுகளில் இருந்து ஏதுவும் வந்திராது, சிவில் சமூகம் வழமையான விதத்தில் செயற்பட்டிருக்கும்.

உங்கள் கேள்விக்கு பதிலளிப்பதற்கு முதல் உங்கள் கருத்திற்கு நான் பதிலளிப்பதற்கு காரணம் இரண்டிற்குமான பதில்கள் ஒரே மாதிரியானவை என்பதே. இலங்கையர்களே அந்த தருணத்தை உருவாக்கினர் சரிதானே? ஜனநாயக பொறுப்புக்கூறலின் முக்கியத்துவத்தை வலியுறுத்திய இரு தேர்தல் முடிவுகளை இலங்கையர்கள் கொண்டு வந்தனர். மேலும் அரசாங்கத்திற்கு வெளியே இருந்துவிட்டு அதற்கு உள்ளே நுழைவது குறித்த எனது அனுபவத்தை நான் பகிர்ந்துகொள்வேன், அரசாங்கத்திற்குள் இருப்பது வேடிக்கையானது அல்ல பல விமர்சனங்களை எதிர்கொள்ள வேண்டியிருக்கும், நான் எனது கொள்கைகளை எப்படி விற்கிறேன், எனக்கு வேறு முக்கியத்துவமான விடயங்கள் உள்ளன என எழுதப்பட்டிருப்பதை வாசிப்பது எனக்கு பிடித்தவிடயமல்ல, ஆனால் வெளியே உள்ளவர்களின் பணியது, நாங்கள் எந்த விடயத்தில் பலவீனமாக உள்ளோம் எள்பதை தெரிவிப்பது.

இந்த அரசாங்கம் பல தொடர்ச்சியான அர்ப்பணிப்புகளை வெளியிட்டுள்ளது. இந்த நாட்டில் மனித உரிமைகளில் முன்னேற்றம் ஏற்படவேண்டுமானால் அது வழங்கப்பட்ட வாக்குறுதிகளிற்காக அரசாங்கத்தை பொறுப்புக்கூறச்செய்வது. மனித உரிமைகள் இலகுவில் கிடைப்பதில்லை மக்கள் அவற்றை பாதுகாக்க வேண்டும், இந்த உரிமைகள் சாத்தியமாவதை உறுதிசெய்வதற்கு அவர்கள் நீதிமன்றம் செல்லவேண்டும், அவர்கள் ஆபத்துகளை எதிர்கொள்ள வேண்டும், ஒன்றுகூட வேண்டும், அமைப்புகளை ஏற்படுத்துவதற்கான உரிமையை பயன்படுத்த வேண்டும், பேனாவின் வலிமையை பயன்படுத்தவேண்டும், தாங்கள் பார்ப்பது போல அழைக்கவேண்டும், பல ஆபத்துக்கள் காணப்பட்டபோதிலும் இத்தனை நெருக்கடியான வருடங்களில் அவர்கள் செயற்பட்டதுபோல.

ஆகவே எனது முக்கியமான பதில் தற்போது செயற்படுவது போல தொடர்ந்தும் செயற்படுங்கள் நீங்கள் உலகின் அபிமானத்தை பெற்றுள்ளீர்கள்.

**கேள்வி**-(மொழிபெயர்ப்பாளர் ஊடாக) நான் (தெளிவில்லை) நான் இங்கிருந்து வந்துள்ளேன் நான் இந்த அமைப்பை பிரதிநிதித்துவம் செய்கிறேன், (தெளிவில்லை) ஆங்கிலத்தில் பேசாததற்கு மன்னிப்பை கோருகிறேன், வடக்கு கிழக்கின் பிரதிநிதி என்ற வகையில், வடக்கு கிழக்கு மக்கள் கடந்த 60 வருடங்களாக இந்த பிரச்சினையால் துயருகின்றனர், நாங்கள் இந்த நாடு எங்களுடையது என்பதை ஏற்றுக்கொள்கிறோம், இலங்கை எங்கள் நாடு, ஆகவே அமெரிக்கா எத்தகைய தீர்வை முன்வைக்கும்,

நாங்கள் பயங்கரவாதத்திற்கு அழைப்பு விடுக்கவில்லை. இங்குள்ள அனைவரையும் எங்கள் முகாம்களிற்கு வந்து எங்கள் துயரங்களை பார்வையிடுமாறு கேட்கிறேன், அமெரிக்கா இலங்கையில் எத்தகைய தீர்விற்கு ஆதரவளிக்கப்போகின்றது என்பதை அறியவிரும்புகிறேன், தமிழ்தேசிய கூட்டமைப்பின் பிரதிநிதி என்ற வகையில் நான் அதனை அறியவிரும்புகின்றேன்?

**தூதுவர் பவர்**-மிகவும் நன்றி ஆங்கிலத்தில் பேசுவதற்கு என்னை மன்னிக்கவும், என்னால் தொழிற்சார் எல்லே விளையாட்டுவீரராக வரமுடிந்தாலும், உங்கள் மொழியில் என்னால் சிறப்பாக பேச முடியாது (சிரிப்பு)

நான் முன்னர் தெரிவித்ததை மேலும் தெளிவுபடுத்த விரும்புகின்றேன், மனித உரிமைகள் அனுபவிக்கபடுவதன் ஒரு பகுதியாக நாட்டின் அனைத்து பகுதிகளையும் சேர்ந்த மக்களின் பொருளதார சமூக வளர்ச்சிகளில் ஏற்படும் மாற்றமும் அமைந்துள்ளது. நீங்கள் தெரிவித்த ஒரு விடயம் மிகவும் முக்கியமானது என நான் கருதுகிறேன், நீங்கள் உங்கள் சகோதரர்களை

வடக்கு கிழக்கிற்கு வந்து நிலைமைகளை பார்வையிடுமாறு கோரினீர்கள், நான் நினைக்கிறேன் எனது உரையில் நான் அவ்வாறான விடயங்களையே தெரிவிக்க முயன்றேன், அதாவது ஏனையவர்களின் சப்பாத்துகளில் எங்கள் கால்களை நுழைக்கலாமா என்பது? ஒரு வீட்டில் தலைமுறை தலைமுறையாக வாழ்ந்த பின்னர் அந்த வீட்டிலிருந்து இடம்பெயர்வதும், தற்போது ஒவ்வொரு நாளும் அந்த வீட்டை மீட்பதற்காக செல்வதும், நிலத்தை மீட்பதற்காக பாடுபடுவதும்- கௌரவத்துடன் நடத்தப்படாததும். அந்த வீடு உங்களுடையது இல்லை என்ற விதத்தில் நடத்தப்படுவதும் எவ்வாறு இருக்கும் என உங்களால் நினைத்துப்பார்க்க முடியுமா?

இவ்வாறான சூழலில் வாழ்ந்தவர்களால் அந்த சூழ்நிலைகள் எவ்வாறு காணப்படும் என்பதனை கற்பனை செய்து பார்க்க முடியுமா? அங்கேயே அதிகளவு பேச்சுவார்த்தைகள் அவசியமாகின்றன, ஏனெனில் இது ஒருபக்கத்திற்கானது அல்லது ஏனைய மக்களும் உள்ளனர், இத்தனை தசாப்தங்களாக இடம்பெற்ற பாரம்பரியங்களுடன் நாட்டை பிளவுபடுத்திய வேற்றுமைகளுடன் வாழும் மக்கள்.

ஆகவே எவ்வளவு தூரம் பேச்சுவார்த்தைகளும் விட்டுக்கொடுப்புகளும் காணப்படுமோ,- அமெரிக்கா பாதிக்கப்பட்ட மக்கள் அதிகமாக உள்ள இடங்கள் குறித்து கவனம் செலுத்தி வருகின்றது, எங்கு பலவீனமான நிலையில் உள்ள மக்கள் உள்ளனர், எங்கு மிகமோசமான வறுமை அல்லது பாரிய இழப்புகள் உள்ளது, சகல தரப்பிலும்.நாங்கள் அதிகளவு பணத்தை முதலீடு செய்ய எண்ணுகின்றோம், ஏனைய நாடுகளையும் அதில் ஈடுபடுத்தப்பார்க்கிறோம், அபிவிருத்தியில், வேலைவாய்ப்புகளில் முதலீடு செய்யபார்க்கின்றோம், இது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த விடயமாகும்.

ஆனால் இந்த தேசத்தின் மக்கள் தனித்தனியாக வளர்ந்தால், அவர்களிற்கு ஒருவரை ஒருவரை தெரியாவிட்டால், பிரிவினையை விதைப்பதால் பலனடையக் கூடியவர்களை மக்களால் கடந்து செல்லமுடியாவிட்டால், சமூகங்கள் ஒருவரையொருவர் அறியாமலிருப்பதை உறுதிப்படுத்துவதால் நன்மையடையக்கூடிய சிலர் உள்ளனர், அவர்கள் தீவிரவாதிகள், அவர்கள் அனைத்து நாட்டிலும் உள்ளனர்.சகல தரப்பிலும் உள்ளனர். இந்த நாட்டில் உள்ள தங்கள் பிள்ளைகளிற்கு சிறந்த எதிர்காலத்தை விரும்பும் குறிப்பிடத்தக்க பெரும்பான்மையான மக்களின் கடமையிதுவாகும். அவர்கள்- உங்கள் தலைமுறையை சேர்ந்தவர்களாயின் வேலைவாய்ப்புகளை விரும்புவார்கள், நாட்டை சுற்றிபார்ப்பதற்கு விரும்புவார்கள், அச்சமடையாமலிருப்பதற்கு விரும்புவார்கள். இலங்கையின் ஆட்சியாளர்கள் ஊழல் மிகுந்தவர்களாகயிருந்தால் அதனை வெளிப்படையாக தெரிவிக்க விரும்புவார்கள், தங்களை தலைவரை அகற்றிவிட்டு, அவர்பொறுப்புக்கூறச் செய்யப்படுவதை விரும்புவார்கள்.

இவை மிகவும் அடிப்படையான, சர்வதே அபிப்பிராயங்கள், இவை சகல சமூகங்கள் மத்தியிலும் காணப்படுகின்றன. எனினும் சிலவேளைகளில் ஒருவர் ஒரு சமூகத்தை மாத்திரம் வரலாற்றுரீதியிலான துயரங்கள் அடிப்படையில் காணகூடும். ஒருவரால் அனைவருக்கும் பொதுவான ஒன்றை காணமுடியுமானால் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை காணமுடியும் என நான் கருதுகின்றேன். அது உற்சாகத்தை அளிக்ககூடியது நான் இங்கு வருவதற்கு முன்னர் உங்கள் ஜனாதிபதியையும், எதிர்கட்சி தலைவரையும் சந்தித்தேன், அவர்கள் ஒன்றினைந்து பணியாற்றுவதற்கு கடினமான முயற்சிகளை மேற்கொண்டுள்ளனர் உங்களுக்கு அது தெரியும்,பல வருடங்களிற்கு முன்னர் காணிகளை இழந்த மக்களிற்கு இராணுவத்தால் மீளவும் காணிகள் வழங்கப்பட்டுள்ளன,ஆனால் அது போதுமானதல்ல.--

**நெறிப்படுத்துபவர்-**உங்களால் கேள்விகளை பெற முடியுமானால் அரங்கில் வலது பக்கத்தில் உள்ளவர்களிடமிருந்து பெற முயலுங்கள், மிகவேகமாக ஒரு முகப்புத்தக கேள்வியையும் கேட்கவேண்டும், அதில் பல கேள்விகள் வந்துள்ளன?

**தூதுவர் பவர்:** நிச்சயமாக

**நெறிப்படுத்துபவர் -** ஆகவே( தெளிவற்றதாகவுள்ளது)அவர் மிகவும் சுவாரஸ்யமான கேள்வியை கேட்டுள்ளார்?

அவர் இவ்வாறு தெரிவிக்கின்றார் அன்பிற்கும் கௌரவத்திற்கும் உரிய பெண்மணி அவர்களே இலங்கைக்கான உங்கள் விஜயத்தின் உண்மையான நோக்கத்தை வெளிப்படுத்தினால் அது – (சிரிப்பு)

**தூதுவர் பவர்-** உண்மையானநோக்கம்? நான் ஏற்கனவே எனது விளையாட்டு இலட்சியங்கள் குறித்து சாட்சியமளித்துள்ளேன் (சிரிப்பு) நான் உண்மையில் இங்கு வந்துள்ளதற்கு காரணம், ஏனெனில் ஒவ்வொரு நாளும் பத்திரிகையை வாசிக்கும்போது நான் மனஅழுத்தங்களிற்கு உள்ளாகின்றேன், ஏனெனில் பெருமளவு அப்பாவி மக்கள் பயங்கரவாத தாக்குதல்களில் கொல்லப்படுகின்றனர், ஏனெனில் தலைவர்கள்-குறிப்பாக சகாராவினை சேர்ந்தவர்கள் அவர்களுடைய அரசியலமைப்பு அவர்கள் இரண்டுதடவைக்கு மேல் பதவியில் இருக்க முடியாது என திட்டவட்டமாக தெரிவிக்கின்ற போதிலும் தொடர்ந்தும் ஆட்சியில் நீடிப்பதற்கு முயல்கின்றனர். ஆனால் தங்கள் அரசமைப்பை மாற்றுவதற்கு முயலும் பல தலைவர்கள் உள்ளனர், தங்களிற்கு சாதகமான தீர்ப்புகிடைக்கவேண்டும் என்பதற்காக நீதிமன்றத்தில் உள்ள நீதிபதிகளை மாற்றமுயல்கின்றனர். அடிப்படையில் மக்களின் நலன்களைவிட இவர்கள் தங்கள் நலன்களிற்கு முக்கியத்துவம் அளிக்கின்றனர். அல்லது பயங்கரவாதத்தை பொறுத்தவரை பொதுவான மனிதகுலத்தின் நலன்களை விடவும் காட்டுமிராண்டித்தனமான கொள்கைகளிற்கே முன்னுரிமையளிக்கின்றனர்.

இந்த பின்னணியில், இலங்கை உள்ளது . இலங்கைக்கு நான் எனக்காக வந்ததிலும் பார்க்க உங்களை ஆதரிக்கவே வந்தேன், ஏனெனில் இது புத்துணர்ச்சியளிக்கின்றது இங்கு நடப்பது. சீர்திருத்தங்கள் தொடர்பாக ,பொறுப்புக்கூறல் தொடர்பாக, வன்முறையால் பாதிக்கப்பட்ட மக்களிற்கு நீதி வழங்கப்படாதது தொடர்பாக இதுவரை நிறைவேற்றப்படாத அனைத்தையும் அறிந்தே நான் தெரிவிக்கின்றேன், நிறைய விடயங்கள் உள்ளன என்பது எனக்கு தெரியும்.எனினும் முழு உலகிலும் இலங்கை போன்று குறுகிய காலத்தில் மாற்றமடைந்த தேசமொன்றை காணமுடியாது, என்னால் வேறு நாட்டை தெரிவிக்கமுடியாது, நான் ஐ.நாவில் உள்ளேன் அதனால் இது குறித்து எனக்கு தெரிந்திருக்கவேண்டும் (சிரிப்பு) இலங்கை போன்ற அனுபவம் இன்னொன்று தேவை என நான் கருதுகின்றேன்.

பர்மாக மிகவும் ஆர்வத்தை தூண்டுவதாக உள்ளது சரியா?சமீபத்திய தேர்தல் முடிவுகளை இராணுவமும் பர்மாவின் ஆட்சியாளர்களும் அங்கீகரித்துள்ளது குறித்து நாங்கள் அனைவரும் மகிழ்ச்சியடைந்துள்ளோம், எனினும் பர்மாவில் ரோகியிங்யா இனத்தவர்களிற்கு அந்த தேர்தலில் முற்றாக வாக்குரிமை வழங்கப்படவில்லை, ஆகவே அங்கு மேற்கொள்ளப்படவேண்டிய நடவடிக்கைகள் பல உள்ளன, குறிப்பாக மியன்மாரின் முஸ்லீம் சமூகத்தினர் தொடர்பாக, சமீப காலங்களில் அவர்களது உரிமைகள் பெருமளவிற்கு பாதிக்கப்பட்டுள்ளன.

மீண்டும் இங்கே உங்களில் எவராவது இன்னமும் நிறைவேற்றப்படாத வாக்குறுதிகள் உறுதிமொழிகள் குறித்த பட்டியலை தரமுடியும்,ஆனால் நான் தெரிவித்தது போன்று குறுகிய காலத்திற்குள் குறிப்பிடத்தக்க மாற்றம் ஏற்பட்ட வேறு ஒரு நாட்டை என்னால் நினைத்துப்பார்க்க முடியாது,நான் இங்கு வந்து அதனை அனுபவிக்க விரும்பினேன் ,என்னால் திரும்பிச்சென்றவுடன் ஜனாதிபதி ஒபாமாவுடன் உரையாடி உங்கள் பயணத்திற்கு அமெரிக்காவால் மேலும் என்ன வகையில் உதவுமுடியும் என்பது குறித்த எண்ணங்களை பகிர்ந்துகொள்ளமுடியும்,

ஆகவே எனது பின்னால் மோசமான சதித்திட்டம் உள்ளது(சிரிப்பு)இதுவே உண்மையான ஆழமான கருத்து.

**நெறிப்படுத்துபவர்**-அதனை பகிர்ந்துகொண்டதற்கு நன்றி எங்களிற்கு இன்னமும் ஒரு கேள்விக்கு இடமுள்ளது?

**கேள்வி**- மதிய வணக்கங்கள் தூதுவர் பவர் அவர்களே உங்களுடன் இந்த கலந்துரையாடலில் ஈடுபடுவது மிகவும் மகிழ்ச்சியளிக்கின்றது,நீங்கள் பல பெண்களிற்கு முன்னுதாரணமாக உள்ளது எனக்கு தெரியும்,தான் இங்கு வரமுடியாது போனது குறித்தும் நான் வருகை தந்தது குறித்தும் எனது மனைவி இரகசிய கோபம் கொண்டுள்ளார்( சிரிப்பு) என்னுடையை கேள்வி இதுதான்- இலங்கை குறித்து பல கேள்விகள் இருக்கலாம்,என்னுடைய கேள்வி உங்கள் தனிப்பட்ட வாழ்க்கை பயணம் தொடர்பானது

**தூதுவர் பவர்**-எது குறித்து?

**கேள்வி**- உங்கள் தனிப்பட்ட வாழக்கை பயணம மற்றும் புத்துணர்வுகள் குறித்து

**தூதுவர் பவர்** – சரி.சரி

**கேள்வி**-தலைமைத்துவத்தை பொறுத்தவரை உங்கள் தொழில்வாழ்க்கையில் பல வித்தியாசமான யுகங்களை சந்தித்தவர் நீங்கள்,பத்திரிகையாளராக, கல்விமானாக தற்போது ஐக்கியநாடுகளிற்கான தூதுவராக-இவை உங்களிடமிருந்து வித்தியாசமான விடயங்களை எதிர்பார்ப்பவை,உங்களிற்கு வெவ்வேறு விதத்தில் ஆர்வமூட்ட கூடியவை. உங்களால் தற்போது அவற்றில் சில விடயங்களை செய்யமுடியாது,ஊடகவியலாளராக அல்லது செயற்பாட்டாளராக செய்திருக்க கூடிய சில விடயங்களை செய்ய முடியாது ஆனால் வேறு விதத்தில் சேவையாற்றுவதற்கு வாய்ப்பு கிட்டியுள்ளது- இது உங்களிற்கு ஏமாற்றத்தை கூட அளிக்கலாம்

இந்த அறையில் அவ்வாறான வேறுவேறு கட்டங்களில் உள்ள பலர் காணப்படுகின்றனர்.நீங்கள் பல இளம்சந்ததியினர் அரசாங்கத்திற்குள் இடம்பெறவேண்டும் என வேண்டுகோள் விடுத்தீர்கள்- உலக நாடுகள் - உங்கள் நாடு உட்பட- தங்களால் செய்ய முடிந்த சரியான விடயத்த செய்யாத தருணத்திலும், அல்லது செய்யக்கூடாததை செய்யும் தனிநபர்களை காணும்போதும் ஏற்படுகின்ற அதிருப்தியை, ஏமாற்றத்தை மோதலை நீங்கள் எவ்வாறு கையாள்கீறீர்கள்? இவ்வாறே-எமது பொதுச்சேவை ஈடுபாட்டிற்காக உங்களது வாழ்க்கை பயணம் மற்றும் புத்துணர்விலிருந்து நாங்கள் தலைமைத்துவத்தை பெறமுடியும்?

**தூதுவர் பவர்**- மிக்க நன்றி? இது மிகவும் நயமான கேள்வி? அரசாங்கத்திற்குள் ஒருவர் நுழையும் போது சமநிலையை பேண வேண்டிய அல்லது இணக்கப்பாட்டிற்கு வரவேண்டிய அனுபவங்கள் குறித்து நீங்கள் சரியாக தெரிவித்தீர்கள்

நான் வெளியே இருந்தவேளை தடுப்பாக காணப்பட்டதை விட உள்ளேயுள்ள போது தடுப்பு ஏற்பாடுகளின் முக்கியத்துவம் குறித்து அரசஅதிகாரி என்ற வகையில் அதிகளவு உணர்ந்துள்ளேன், ஆகவே எனக்கு தெரியவில்லை- அதனையே குறிப்பிடுகின்றேன், உங்களிற்கு இலங்கை தொடர்பான ஒரு உதாரணத்தை குறிப்பிடலாம் -இலங்கையில் யுத்தம் முடிவிற்கு வந்துகொண்டிருந்த முற்றிலும் வித்தியாசமான முடிவை சந்தித்துக்கொண்டிருந்த வேளையே நாங்கள்- ஒபாமா நிர்வாகம் ஆட்சிப்பொறுப்பை ஏற்றது, நான் சர்வதேச விவகாரங்கள் தொடர்பான ஜனாதிபதியின் ஆலோசகராக பணிபுரிந்தேன், இங்கிருந்து செயற்பட்ட சர்வதேச அமைப்புகள் காணப்பட்டன, இங்கு இடம்பெறுகின்ற பெரும் மனவேதனை தருகின்ற விடயங்கள் குறித்து எங்கள் தூதுவர் ரொபேர்ட் பிளேக்கிடமிருந்து நாங்கள் அறிந்த வண்ணமிருந்தோம், விடுதலைப் புலிகளை தோற்கடிப்பதற்கான வாய்ப்புகளை அனைவரும் வரவேற்றது உண்மை,

மிகவும் ஆரம்பநாட்களில் நான் அலுவலகத்தில் இருந்தவேளை அரசசார்பற்ற அமைப்பு ஒன்றிலிருந்து ஒருவர் என்னை பார்ப்பதற்கு வந்திருந்தார், அவர் எனக்கு முன்னால் வரைபடம் ஒன்றை விரித்தார், இலங்கையின் இறுதிக்கட்டம் எங்கு நடைபெறுகின்றது என்பதை சுட்டிக்காட்டினார், அது எனக்கு மிகவும் முக்கியமான தருணம், நான் ஒவ்வொருநாளும் எனது தூதுவர் அனுப்பும் செய்திகள், பத்திரிகைளில் இருந்து வாசித்துக் கொண்டிருந்தேன் இயல்பாகவே புலனாய்வு தகவல்களையும், ஆனால் அது குறித்த மனிதாபிமானமுகத்தை என்னில் ஏற்படுத்துவதற்கு ஒருவர் வரவேண்டியிருந்தது,

நான் ஏதொ ஒரு வகை டார்வினின் இயல்பான ஒரு தனிநபர் தனது வாழ்க்கை எவ்வாறு செலவிடவேண்டும் என்பதில் நான் டார்வினின் இயல்பை பின்பற்றியிருக்கிறேன் என நான் எந்த வகையிலும் தெரிவிக்க மாட்டேன், நீங்கள் சிவில் சமூகத்தின், சுயாதீன ஊடகத்தின்,அந்த கட்டுப்பாடுகளின் முக்கியத்துவத்தை பாராட்டுகின்றீர்களா? ஏனெனில் நீங்கள் அரசாங்கத்தில் உள்ளபோது இதனை பெறுகின்றீர்கள்- இது மனதில் வைத்திருக்கப்படவேண்டிய விடயம், நீங்கள் எப்போதும் மும்முரமாக இருப்பீர்கள், உங்கள் வாழ்க்கையில் இருப்பதை போல ஆனால் நீங்கள் சந்திக்வேண்டிய ஆபத்துக்களும் உள்ளன.

ஆகவே நீங்கள் பிரச்சாரம் செய்யும்போது, வெளியில் வந்து மக்களை சந்திக்கும்போது, அவர்களுடைய கதைகளை செவிமடுக்கும்போது அதுவேறு விடயம் நீங்கள் மிகவும் புத்துணர்வு பெற்றது போல தோன்றுவீர்கள், மேலும் நீங்கள் சற்று தனிமைப்படுத்தப்பட்டுள்ளது போலவும் உணரலாம், ஆகவே நீங்கள் இந்த குரல்களை செவிமடுப்பதற்கான வழிவகைகளை கண்டறிவது, விமர்சனங்கள் உங்களிற்கு பிடிக்காததால் அவற்றை தவிர்த்துவிடாமலிருப்பது, நீங்கள் தடையேற்பாடுகளை ஆராய்ந்து உறுதிப்படுத்துவது. இவை ஒவ்வொன்றும் நான் முன்னர் தெரிவித்தது போன்று லூயிஸ் பிரான்டெஸ் மற்றும் ஜனாதிபதி ஒபாமாவை மேற்கோள்காட்டி- பிரஜைகளின் அலுவலகங்கள், சிவில் சமூக தலைவரின் அலுவலகம். இந்த நாடு தற்போது காண்பிப்பது போன்று, பூமியின் எந்த நாட்டைவிடவும், சிவிலசமூகம் ஒருபோதும் மனந்தளரவில்லை, அது ஜனநாயக மற்றும் பொறுப்புக்கூறும் ஆட்சியை விரும்புவதாக வலியுறுத்தியது-தற்போது அதற்கு அதனை பலப்படுத்துவதற்கான உண்மையான சந்ர்ப்பம் உள்ளது.

இதற்கு அப்பால் நான் தெரிவிப்பேன், எனது அரசாங்க வாழ்க்கையில் நான் ஒன்று வித்தியாசமானவள் இல்லை, இதுவரை இராஜதந்திரியா இருப்பதில் பெரும்பிரச்சினைகளை எதிர்கொண்டுள்ளேன், மேலும் நான் இதில் திறமைவாய்ந்தவள் அல்ல,இங்கு என்னுடன் எனது குழுவினர் உள்ளனர்,இவர்கள் சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகம் போன்ற அமைப்புகளில் இருந்து வந்தவர்கள், அல்லது கடந்த காலங்களில் பத்திரிகையாளர்களாக பணியாற்றியவர்கள், அரசாங்கத்தில் பல்வேறு பிரிவினர் உள்வாங்கப்படுவதை உறுதிப்படுத்தப்படுவதற்காக வந்தவர்கள். ஆகவே இந்த வேற்றுமை, இனங்களிற்கு இடையேயான. அல்லது மதங்களிற்கு இடையிலான வேற்றுமை போன்றது - இது படைப்பாற்றலை கொண்டுவருகின்றது, பிரச்சினைகளிற்கு தீர்வை காண உதவுகின்றது – மக்கள் எவ்வாறு சிந்திக்கின்றார்கள் போன்ற விடயங்களில்.

ஆனால் நான் பணிபுரிந்த சகல தொழில்களிலும் எனது தன்முனைப்பாற்றல் ஒரேமாதிரியானதாகவே காணப்படுகின்றது, நான் எங்கிருந்தாலும், என்னால் உதவுவதற்கு என்ன செய்யமுடியும் என நான் சிந்திக்கிறேன், நான் பத்திரிகையாளராக பணியாற்றிய வேளையிலும், குறிப்பிட்ட நபர் ஒருவரின் கதையை அரசாங்கம் வாசித்து நடவடிக்கை எடுக்கும் விதத்தில் எவ்வாறு தெரிவிப்பது என்பது குறித்து நான் சிந்திப்பேன்,தற்போது நானே என்ன செய்யவேண்டும் என்பதை தீர்மானிக்கும் நிலையில் உள்ளேன், ஆனால் அரசாங்கத்திலோ அல்லது தனியார் துறையிலோ இணைந்துகொள்ளும் எவரையும் இந்த கனவான் தெரிவிப்பது போல செயற்படுமாறு நான் ஊக்குவிக்கின்றேன், பிரச்சினைகள் குறித்த எங்களது மனத்தோற்றத்திலிருந்து விலகி அந்த

பிரச்சினைகளை உண்மையில் அனுபவித்துக் கொண்டிருக்கும் மக்களை நேரடியாக சந்தியுங்கள், ஏனெனில் பிரச்சினைகளிற்கு தீர்வை காண்பது மிகவும் கடினமான விடயம் என நான் கருதுகிறேன், ஏமாற்றங்கள் நிகழும் போது உங்கள் தன்முனைப்பை இழக்காமலிருப்பது, குரலற்றவேளை அல்லது உங்களால் தாக்கம் செலுத்த முடியாத வேளையில் தொடர்ந்தும் அந்த முயற்சியில் பிடிவாதாமாக ஈடுபடுவது உங்கள் பயணத்தை தொடரச்செய்யும்,ஏனெனில் நீங்கள் பாதிக்கப்பட்ட மக்களை சந்தித்துள்ளீர்கள், அதில் ஏதொ புதினமான தன்மையுள்ளது என நீங்கள் கருதுகிறீர்கள், அங்கு கடமையொன்று உள்ளது.

மனித உரிமை தொடர்பான எனதுசகல பணிகள் காரணமாகவும் நான் அதிஸ்டசாலி, எங்கள் நாடுகள் அட்டுழியங்கள் இடம்பெறுவதை தடுப்பது மற்றும் மனித உரிமைகள் அற்ற பொதுமக்களை பாதுகாப்பது என்ற நோக்கத்தை முன்னெடுத்துச் செல்ல முயல்கின்றன.நான் யுத்தசெய்தியாளராக பணிபுரிந்துள்ளேன், ஆனால் எனது வீடு விமான குண்டுவீச்சிற்கு உட்படாததால் எனது குடும்பம் தாக்கப்படாததால் என்னால் விலகமுடிந்தது, அந்த வகையில் நான் ஆசீர்வதிக்கப்பட்ட ஒருவர், இதன் காரணமாக என்ன பணியில் நான் இருந்தாலும் என்னால் ஏதாவது செய்யவேண்டிய கடமையை அது உருவாக்கியுள்ளதாக நான் கருதுகின்றேன்,

**நெறிப்படுத்துபவர்-** பவர் அவர்களே- நீங்கள் இங்கிருப்பது குறித்து நாங்கள் மிகவும் மகிழ்ச்சியடைந்துள்ளோம்,

**தூதுவர் பவர்-** நன்றி (கைதட்டல்கள்)